தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 9

2011 ஆகஸ்ட் 26, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்."

நாம் நன்கு கற்ற கருத்துகளை அவையோர் மனதில் பதியுமாறு பேசுவதில் வல்லவர்களே, கற்றவர்கள் அனைவரையும் விடச் சிறந்த கல்வியறிவுடையவராக மதிக்கப்படுவார்கள்.

[**குறிப்பு**: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. சிறப்புக் கவன ஈர்ப்பு

திரைக்கு வராமல் இருக்கும் திரைப்படங்களைத் திரையிட்டு அத்தொழிலாளர்களைக் காக்க வேண்டியதன் அவசியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சென்ற ஆட்சியின் கெடுபிடியால் திரைக்கு வராமல் இருக்கும் சுமார் 200 திரைப்படங்களைத் திரையிட்டு அத்தொழிலாளர்களின் குடும்பங்களைக் காக்க வேண்டிய அவசியம் குறித்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. க. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. டி. இராமச்சந்திரன், திரு. பி.எல். சுந்தரம், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. எஸ்.பி. முத்துக்குமரன், திரு. கு. லிங்கமுத்து மற்றும் புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்*

டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் திரைப்படத் துறை கடுமையான நெருக்கடிக்கும், சிக்கல்களுக்கும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் உள்ளானது. திரைப்படத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களையும், கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளார்கள். யாரும் தரமான படம் தயாரிக்க முடியாது. தரமான படத்தைத் தயாரிப்பாளர்கள் தயாரித்தாலும் அதைத் திரையிட முடியாது. திரையிடுவதற்கான Theatres முழுவதையும் கருணாநிதியினுடைய குடும்பத்தார், குறிப்பாக Sun Pictures அடிமாட்டு விலைக்கு வாங்கி, அப்படத்தை அவர்கள் தயாரித்து, திரையிடுவதாக அறிவித்து விடுவார்கள். படத் தயாரிப்பாளர்களுக்கும் ஒப்புக்கொண்ட தொகையைக்கூட கொடுக்கமாட்டார்கள். தயாரிப்பாளர்கள் யாராவது கேட்டால், அடியாட்களை வைத்து மிரட்டுவது போன்ற சமூகவிரோத, ரௌடித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். தயாரிக்கப்பட்ட படங்களில் சில நட்சத்திர நடிகர்கள் நடிக்க முடியாது. யாராவது படத் தயாரிப்பாளர்கள் படம் தயாரித்து, Sun Pictures நிறுவனத்தின் அடக்குமுறைகளை மீறி திரையிட முயற்சித்தால், தமிழகத்தில் எந்த Theatre-ம் கொடுக்க அனுமதிக்க முடியாத நிலைக்கு Theatre உரிமையாளர்கள் மிரட்டப்பட்டார்கள். கருணாநிதியின் குடும்பப் பேரன்கள் சினிமா படம் எடுப்பது போலவே, கதை, திரைக்கதை, வசனம், direction, editing போன்ற அனைத்தையும் குடும்பத்தின் பொதுச் சொத்தாக மாற்றிவிட்டார்கள். இதனால் திரைப்படத் தயாரிப்பாளர்கள், நடிகர்கள், துணை நடிகர்கள், Theatre உரிமையாளர்கள், தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, பொருளாதார சிரமத்திற்கு உள்ளாகியுள்ளார்கள். எனவே, இத்துறையைப் பாதுகாத்து, எந்தக் குடும்ப நிர்பந்தத்திற்கும் ஆளாகாமல், ஜனநாயக

நெறிமுறைகளுக்கு உட்பட்டு திரைப்படத் துறை செயல்படவும், திரைப்படத் தயாரிப்பாளர்கள், நடிகர்கள், தொழிலாளர்கள், Theatre உரிமையாளர்களுக்கு தி.மு.க. காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு Sun Pictures நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டைப் பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இந்தத் துறையைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006 முதல் 2011 வரையிலும் தமிழகத்திலே ஆட்சியில் இருந்த தி.மு.க. அரசு நில மோசடி செய்ததைப் போலவே திரைப்படத் துறையிலும் தங்களுடைய குடும்பத்தினுடைய அதிகாரத்தை விரிவுபடுத்தக்கூடிய வகையில் Red Giant, Cloud Nine போன்ற ஆங்கிலப் பெயர்களில் பல்வேறு கம்பெனிகளை உருவாக்கி, திரைப்படத் துறையிலே வலிந்து அவர்களுடைய குடும்பத்தாரைத் திணித்ததோடு மட்டுமின்றி, ஆயிரக்கணக்கான ஏழையெளியவர்கள், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் திரைப்படத் தொழிலை நம்பி திரையரங்குகளைக் கட்டியவர்கள் மற்றும் பல்வேறு துணைத் தொழில்களைச் செய்தவர்கள் அனைவரையுமே அதிகாரத்தை வைத்து முடக்கக்கூடிய வகையில் செயல்பட்டது. அதுமட்டுமின்றி, தமிழிலே பெயர் வைத்தால் வரிச் சலுகை என்ற பெயரிலே தனது குடும்பத்தாரைச் சேர்ந்தவர்கள் தயாரித்த தமிழ் அல்லாத பெயர்களுக்கும், குறிப்பாக 'எந்திரன்' என்ற எந்தவிதத்திலும் சம்பந்தமில்லாத பெயர் வைத்ததற்குக்கூட ஏறக்குறைய 50, 60 கோடி ரூபாய்க்கு மேலாக வரி இழப்பு செய்யக்கூடிய வகையிலே அவர்களுடைய காலத்திலே வரிச் சலுகை அளித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-05

எனவே, இதுபோன்று ஒட்டுமொத்தமாக ஒரு துறையையே, நடிப்புத் துறையான அந்தத் திரைப்படத் துறையையே கழுத்தை நெரிக்கக்கூடிய வகையிலே தி.மு.க. அரசு செயல்பட்டிருக்கிறது. அந்த முடக்கத்திலேயிருந்து இந்தத் துறையை மீட்டெடுக்கவும், கடந்த 5 ஆண்டுக் காலம் செய்த தவறுகளையெல்லாம் முழுமையாக வெளிச்சத்திற்குக் கொண்டு வரவும், தக்கதொரு

நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை நான் என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் சொல்வதற்கு முன்னால், எனக்கு இந்த அரிய வாய்ப்பினை வழங்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 1½ கோடி தொண்டர்களில், கடைநிலைத் தொண்டனாகப் பணியாற்றிக் கொண்டிருந்த என்னை, இரண்டு முறை சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக அறிமுகப்படுத்தி, வெற்றி பெறவும் செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி, அம்மாவினுடைய அமைச்சரவையிலே பணியாற்ற எனக்கு ஒரு வாய்ப்பினையும் தந்த, தினம் நான் போற்றி வணங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அரசியல் வரலாற்றிலே, 'ஆணையிடுவது புரட்சித் தலைவி அம்மா என்றால், அதைச் செய்து முடிப்பது கழக மாணவர் அணி' என்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், தாரக மந்திரத்தை ஏற்று பணியாற்றிக் கொண்டிருந்த எனக்கு, நான் சிறிதும் எதிர்பார்த்திராத வகையில் தென் சென்னை மாவட்ட மாணவர் அணித் தலைவராகவும், கழக மாணவர் அணியின் துணைச் செயலாளராகவும், தென் சென்னை மாவட்டக் கழகத்தின் செயலாளராகவும் பணியாற்றுவதற்கான ஒரு வாய்ப்பினைத் தந்து, கட்டளையிட்டு, நாங்கள் எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டுமென்று ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி, என்னைத் தினமும் வழிநடத்திக்கொண்டிருக்கின்ற, மக்களின் பேராதரவோடு தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன்.

2011 ஆகஸ்ட் 26] [திரு. ஞா. செந்தமிழன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தயாரிக்கும் திரைப்படங்களை வெளியிடுவது அரசினுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லை. தனியார் தயாரிக்கும் திரைப்படங்கள் பற்றியோ, படம் தயாரிக்கப்பட்டு திரைக்கு வராமல் இருப்பது பற்றியோ எந்தவிதத் தகவலும் இத்துறையால் பெறப்படவில்லை. பொதுவாக, தயாரிப்பாளர்கள் திரைப்படங்கள் தயாரிக்கும் விவரம் பற்றியோ, எவ்வளவு பொருட்செலவில் தயாரிக்கப்படுகிறது என்பது பற்றியோ, நடிகர்கள் விவரங்கள் ஆகியவற்றை அரசுக்குத் தெரிவித்து விண்ணப்பம் செய்ததில்லை. மேலும், திரைப்படங்கள் இடையில் நிறுத்தப்பட்டதாகவோ அல்லது தயாரிக்கப்பட்ட படங்களைத் திரையிட அல்லது வெளியிட இயலாத நிலை இருப்பதாகவோ, இதனால் குடும்பங்கள் சிரமப்படுவதாகவோ அல்லது அப்படங்களை வெளியிட்டு உதவ வேண்டுமென்றோ யாரும் மனு செய்யவில்லை.

தனியார் திரைப்படங்களைத் தயாரிப்பது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பாகும். இதில் எவ்வளவு தொகை சம்பந்தப்பட்டவர்களால் செலவு செய்யப்படுகிறது என்ற விவரம், திரைப்படம் முழுமையடைந்த விவரம் ஆகியவற்றை அரசுக்குத் தெரிவிப்பதில்லை. தயாரிக்கப்பட்ட படங்களை வெளியிட இயலாத நிலை உள்ளதாக யாரும் அரசுக்குத் தெரிவிக்கவில்லை. மேலும், தனியார் தயாரிக்கும் திரைப்படங்களை வெளியிடும் பொறுப்பு தயாரிப்பாளர்களையே சேரும். இதில் அரசுக்கு எந்தவிதப் பங்கும் இல்லை.

தமிழக அரசு திரைப்படத் துறையினரின் நலனைக் கருத்திற்கொண்டு, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட, தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு— கடந்த மைனாரிட்டி திமுக. ஆட்சியிலே தங்களுடைய குடும்ப நலனுக்காக பெயர் மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட படங்களுக்கல்ல— மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளபடி, தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் மானியம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் சின்னத் திரைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் சின்னத் திரைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றனர். ஒவ்வோராண்டும் ஜனவரி

1 ஆம் நாள் முதல் டிசம்பர் 31 ஆம் நாள் வரையிலான கால அளவில் மத்திய திரைப்படத் தணிக்கைக் குழுவினரால் சான்றளிக்கப்பட்ட, முழு நீள தமிழ்த் திரைப்படங்களில் சிறந்தவற்றுக்கும், சிறந்த நடிகர், நடிகை மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் ஒவ்வொரு கல்வியாண்டிலும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்கள், குறும்படங்களின் சிறந்த இயக்குநர், ஒளிப்பதிவாளர், ஒலிப்பதிவாளர், படத் தொகுப்பாளர் மற்றும் படப் பதனிடுவோர் ஆகியோருக்கும் ஆண்டுதோறும் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றனர். திரைப்படத் துறையினரின் நலன்களைக் காக்கும்பொருட்டு, சின்னத் திரையினரையும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. திரைப்படத் துறையினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, விபத்து உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை, ஈமச் சடங்கு உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் கண் கண்ணாடி செலவுத் தொகை ஆகிய நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்த இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினரும்; புதிய தமிழகம் கட்சியின் உறுப்பினரும் கடந்த 5 ஆண்டுகால மைனாரிட்டி திமுக ஆட்சியிலே திரைப்படத் துறையினர் எப்படியெல்லாம் அல்லல்பட்டார்கள்; எப்படியெல்லாம் துன்பப்பட்டார்கள் என்பதைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மைதான். கடந்த ஆட்சியாளர்கள், திரைப்படத் துறையையே நசுக்க வேண்டும், தன்னுடைய கையிலே வைத்துக்கொள்ள வேண்டும், யாரும் படங்களைத் தயாரிக்கக்கூடாது, தயாரித்தாலும் திரையிடக் கூடாது என்ற ஒரு அறிவிக்காத கட்டுப்பாட்டைத் தமிழகம் முழுவதிலும் கொண்டு வந்திருந்தார்கள். தமிழ், தமிழ் என்று சொல்லி, தமிழை வைத்து பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த மைனாரிட்டி சர்க்காரின் முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்களும், அவருடைய குடும்பத்தாரும், அவர்களது சினிமா கம்பெனிகளுக்கு வைத்துள்ள பெயர் என்ன தெரியுமா? "Red Giant", "Cloud Nine". இதுதான்

அவர்கள் தயிழ்ப்பீது வைத்திருந்த பற்று. சிறிய தயாரிப்பாளர் படங்களாக இருந்தாலும் சரி, பெரிய தயாரிப்பாளர் படங்களாக இருந்தாலும் சரி, எத்தனை நாள் ஓடக்கூடிய நல்ல படங்களாக இருந்தாலும் சரி, தியேட்டர்களிலே இந்தக் கம்பெனிகள் சார்பாக வெளியிடப்படும் படங்கள் திரையிடப்பட வேண்டுமென்றால் தியேட்டர்களுடைய உரிமையாளர்கள் மிரட்டப்பட்டு, அந்தப் படங்களெல்லாம் எடுக்கப்பட்டு, இவர்களுடைய படங்கள்தான் திரையிடப்பட்டு ஓடின.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து சட்டமன்றத்திலேகூட இதையெல்லாம் நாங்கள் பேசினோம். ஆனால், அது அத்தனையும் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருந்தது. ஆனால், இன்றைக்கு the Rule of Law என்று சொல்லக்கூடிய சட்டத்தின் ஆட்சி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நூறு நாட்களிலே நூறு ஆண்டுகாலச் சாதனையை நிகழ்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சினிமா துறையினருடன் நலன்களையும் சேர்த்து, காப்பார்கள் என்று சொல்லி இந்த அளவில் விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No clarification.

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

அரசுப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவது, ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, முப்பருவ முறையை அறிமுகம் செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Detail-ஆகச் சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.